# பால் புட்டியின் கதறலும் உடலை இழந்த உயிர்களின் ஓலமும்...!

## ‘கணையாழி’ தலையங்கம்!





கரூர் துயரம்
பதறியடித்துப் பறந்திருக்கிறார்
தமிழ்நாடு முதல்வர்!
யாரைப் பார்க்க வந்தார்களோ
அவர்கள்
யாரையும் பார்க்காமல்
பத்திரமாகப்
போய்ச் சேர்ந்திருக்கிறார்கள்?
ஆனால்
பார்க்க வந்தவர்கள்
திரும்பிப் பார்க்கவே முடியாமல்
போய்ச் சேர்ந்திருக்கிறார்கள்!
காரணம் கட்டமைக்கத்
தேடி அலைகின்றன ஊடகங்கள்!
ஒவ்வொரு நிமிடமும்
ஊதி ஊதிப் பெருக்கிப்
பிம்பத்தைக் கட்டமைத்து
மக்களை உசுப்பிக்
கூட்டிவந்த ஊடகங்கள்
தாங்களும் காரணம்
என்பதை மறைக்க
கை காட்டுகிறது அடுத்தவர்களை!
வாழ்க்கைக்கு அர்த்தம் தேடி
தங்களுக்கான குழுக்களைக்
கண்டறிய வாய்ப்பளிக்கும்
சமூக ஊடகம்தான் -
தனி மனிதர்
சமூகத்தோடு உறவு கொள்ள
உலகச் சமூகத்தை
உருவாக்க வேண்டிய
சமூக ஊடகம்தான் -
இயல்பான உலகத்திலிருந்து
மனிதர்களைப் பிரித்துத்
தனிமைப்படுத்துகிறது!
எங்கேயோ இருப்பவர்களோடு
தொடர்பில் இருக்கவும்
வீட்டில் உள்ளவர்களோடு
வெறுப்பில் இருக்கவும்
தூரத்து உரையாடலும்
அருகில் மௌனமுமாக
ஊடகத் தொடர்பு
சமூகத் தனிமையைக்
கட்டமைத்து விடுகிறது.
சிறு சிறு குழுக்களில் நெருக்கம்
பெரும் சமூகத்தில் தனிமை!
நம் வீட்டில் தெருவில்
நடப்பதில் நாட்டமில்லை
திரையைப் பார்த்துச்
சிரிப்பும் அழுகையும்!

தன் உணர்வும் அறிவும்
தேவைப்படாமல்
அடுத்தவர் பதிவில் வாழ
ஆசை காட்டுகிறது!
நம்மோடு நாம் இருக்கும்
தொடர்பைத்
தொலைக்க வைக்கிறது!
இப்போது
ஊடக ஆதிக்கத்தில்
ஊசலாடுகிறது வாழ்க்கை!
கொள்கையற்ற சேர்க்கைக்கும்
அபிப்பிராயங்களின் வேட்டைக்கும்
அலைய வைக்கிறது மனதை!
அடிப்படை புரிதல் இல்லாமல்
விருப்ப ஈடுபாடுகளின்
தலையாட்டிப் பொம்மைகளாக
விலைபோக வைக்கிறது மக்களை!
காட்சி ஊடகக்
கண்காட்சி விலங்குகளாக
மக்களை மயக்கி
வியாபாரம் பெருக்கும்
ஊடக நரகத்தில் உலகம்!
காட்சி உலகை நம்ப வைத்து
வாழும் உலகை வெறுக்க வைக்கிறது
ஊடக உலகு!
யுவல் நோவா ஹராரி சொல்கிறார்
மனிதவள வரலாற்றில்
தவிர்க்க முடியாத ஆற்றல்
முட்டாள்தனமாம்!
கடவுளும் இயற்கையும் கூட
முட்டாள்தனத்திலிருந்து
காப்பாற்ற முடியாதாம்!
அதையே மூலதனமாக வைத்து
தனிநபர் மீது நம்பிக்கைப் பிம்பத்தைக்
கட்டமைக்க வருகிறார்கள்!
கொள்கை இல்லாமல்
தனிநபரை முன்வைத்துத்
தான் முன்னேற
மக்களின் மனநலத்தைச் சிதைக்கிறார்கள்!
நமக்கே தெரியாமல்
அவர்களின் வசதிக்கு
நமது மூளையைச்
சிந்திக்க வைக்கிறது சமூக ஊடகம்!
அதிகார வேட்கையில்
தலைமையும்
வெளிச்சப் பூச்சிகளாய்
மக்களுமாக
வியாபார வேட்டையில் ஊடகங்கள்!

தலைப்படை நுங்கும்
இடைப்படை பனம் பழமும்
கடைசியில் வரும் படை
சுடுபனைக் கிழங்கும்
சாப்பிட்டுக் கடக்கும்படியான
நலங்கிள்ளியின்
பெரும்படை அணிவகுப்பைப்
பாடியிருக்கிறார்! (புறநானூறு, 225)
சங்க காலப் புலவர்
ஆலத்தூர் கிழார்!
சோழர்களின் கருவூலம்
சேரர்களின் தலைநகரம்
மேற்கு நோக்கிய பெருமாள் கோயில்
குடவரைக் கோயிலுக்குள் ஆஞ்சநேயர்!
புரட்டாசி சனியில்
அமராவதித் தாய்க்கு
உயிர்களின் படையல்!

பெண்கள் பாண்டி ஆடிய
அமராவதி ஆற்று மணலில்
குருதி ஓட்டம்!
வஞ்சி மாநகருக்கு
இன்னொரு பெயர் கரூர்!
சிலப்பதிகாரத்தில் கூட
மதுரையில்தான் கொலைக்களக் காதை!
இப்போது
வஞ்சிக் காண்டத்தில்!
அரசு சொல்வதைக்
கேட்க மனம் இல்லாத தலைமை!
தலைமைக்குக் கட்டுப்படாத
தனது கட்டுப்பாட்டில்
தானே இல்லாத
தான்தோன்றிகள் !
போர்க்களம் போல
கரூர் வேலுசாமிபுரம்!
குவிந்து கிடக்கும்
காலணிப் பிணங்களுடன்
கைக்குழந்தைக்கான
பால் புட்டியும்
கட்சிக்கொடி சுற்றி!
மன்னிக்காது வரலாறு!
இனி
காரணமானவர்களை
விரட்டிக்கொண்டே இருக்கும்
பால் புட்டியின் கதறலும்
உடலை இழந்த
உயிர்களின் ஓலமும்...!!



**ம.ரா.**

-நன்றி
‘கணையாழி’
அக்டோபர் - 2025



கரூரில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியல் பரப்புரைக் கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பலியான சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் ஒன்றியம் சுக்காம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த ஆனந்த் என்பவர் குடும்பத்திற்கு ஆறுதல் கூறி முதலமைச்சர் பொது நிவாரண நிதியின் கீழ் அறிவிக்கப்பட்ட ரூ.10 லட்சத்திற்கான காசோலையை அமைச்சர் இரா.ராஜேந்திரன் வழங்கினார். அப்போது கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., மாவட்ட ஆட்சியர் டாக்டர் பிருந்தா தேவி, ஒன்றிய தி.மு.க. செயலாளர் ஏ.விஜயகுமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், பேரூராட்சி தலைவர் பாபு , துணை தலைவர் செல்வ சூரியா சேதுபதி, மகாலட்சுமி, பாக்கிய லட்சுமி, சங்கர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# திருவாரூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பெயரில் நவீன பேருந்து நிலையம்!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

திருவாரூர், அக். 4–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் வழிகாட்டுதலின்படி, திருவாரூர் நகராட்சியில், ரூ.16 கோடியே 30 லட்சம் மதிப்பீட்டில் ”முத்தமிழறிஞர் கலைஞர் நகர பேருந்து நிலையத்தினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., வை.செல்வராஜ் எம்.பி., முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன், நகர செயலாளர் வாரை எஸ். பிரகாஷ், நகர்மன்ற தலைவர் புவனப்ரியா செந்தில், துணைத் தலைவர் அகிலா சந்திரசேகர் நகராட்சி ஆணையர் சுரேந்திர ஷா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

நகரின் மத்தியில் பிரமாண்டமாய் அமைக்கப்பட்டிருக்கும் இந்த பேருந்து நிலையத்தில் 15 பேருந்து நிறுத்தம் தடங்களுடன், தரைத்தளத்தில் பிளாக்1ல் 61 கடைகளும், பிளாக்2ல் 10 கடைகளும், பிளாக்3ல் 24 கடைகளும் என 95 கடைகளும், முதல் தளத்தில் பிளாக்1ல் 59 கடைகளும், பிளாக்2ல் 10 கடைகளும், பிளாக்3ல் 12 கடைகளும் என 81 கடைகள் என மொத்தம் 176 கடைகள் என அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் அமையப்பெற்றுள்ள பேருந்து நிலையம் இன்றைய தினம் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. என்னைப்போன்றவர்களை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் செயல்படும் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் கீழ் திருவாரூரில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 23 எண்ணிக்கையில் ரூ.43.97 கோடி மதிப்பீட்டிலும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 05 பணிகள் 54 லட்சம் மதிப்பீட்டிலும், தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தில் 10.142 கிலோமீட்டர் ரூ.10 கோடி மதிப்பீட்டில் 43 பணிகளும், நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 37 பணிகள் ரூ.4 கோடி 35 லட்சம் மதிப்பீட்டிலும், 15வது நிதி குழு மானிய திட்டத்தின் கீழ் 57 பணிகள் ரூ.9.30 கோடி மதிப்பீட்டிலும், மாநில நிதிக்குழு மானியத்தின் கீழ் 2 பணிகள் ரூ.66 லட்சத்திலும், மூலதன மானிய நிதியின் கீழ் 3 பணிகள் ரூ.2 கோடி 21 லட்சம் மதிப்பீட்டிலும், இயக்குதல் மற்றும் பராமரித்தல் நிதியின் கீழ் 4 பணிகள் 17 லட்சம் மதிப்பீட்டிலும், தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க திட்டத்தின் கீழ் 2 பணிகள் ரூ.1 கோடியே 85 லட்சம் மதிப்பீட்டிலும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 09 பணிகள் ரூ.5.56 லட்சம் மதிப்பீட்டிலும் என 185 பணிகள் ரூ.78 கோடி 61 லட்சம் மதிப்பீட்டில் முடிவுற்றுள்ளது.

திருவாரூரில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 7 பணிகள் ரூ.15.5 கோடி மதிப்பீட்டிலும், அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.78 கோடியே 15 லட்சம் மதிப்பீட்டிலும், மூலதான்ய மானிய நிதியின் கீழ் 1 பணி ரூ.4 கோடியே 6 லட்சம் மதிப்பீட்டிலும், பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் ரூ.29 கோடியே 46 லட்சம் மதிப்பீட்டிலும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.98 லட்சம் மதிப்பீட்டிலும், நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 86 பணிகள் (24.50 கி.மீ.,) ரூ.8 கோடியே 17 லட்சம் மதிப்பீட்டிலும் என 97 பணிகள் ரூ.136 கோடியே 32 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்றுவருகிறது.

மேலும், திருவாரூரில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஜூப்ளி மார்க்கெட் பகுதியில் வணிக வளாகம் ரூ.8 கோடியே 63 லட்சம் மதிப்பீட்டிலும், மூலதன மானிய நிதி மற்றும் இயக்குதல், பராமரித்தல், பற்றாக்குறை நிதியின் கீழ் பழைய பேருந்து நிலைய தார் சாலை மற்றும் பேருந்து நிறுத்தத்திற்கு டென்சைல் கூரை ரூ.66 லட்சம் மதிப்பீட்டிலும், பள்ளி மேம்பாட்டு நிதியின் கீழ் வி.எஸ்.டி தெருவில் அங்கன்வாடி கட்டடம் ரூ.16 லட்சம் மதிப்பீட்டில் அமையப்பெறவுள்ளது.

தமிழ்நாடு அரசின் நான்காண்டு காலங்களில் நடைபெற்றுவரும் குடிநீர் திட்டங்கள் மூலம் திருவாரூர் மாவட்டம், திருவாரூர், நன்னிலம் கொரடாச்சேரி, மன்னார்குடி, கோட்டூர் மற்றும் திருத்துறைப்பூண்டி ஒன்றியங்களை உள்ளடக்கிய 667 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.1127 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இது முடியும் போது கூடுதலாக 4 லட்சம் மக்களுக்கு 29 எம்.எல்.டி. குடிநீர் வழங்க இயலும்.

கொரடாச்சேரி பேரூராட்சியில் 1 குடிநீர் திட்டம் ரூ.7 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இது முடியும் போது கூடுதலாக 7 ஆயிரம் மக்கள் பயன்பெறுவார்கள். திருவாரூர் மாவட்டத்திலுள்ள வேதாரண்யம் கூட்டுக் குடிநீPர் திட்டத்தில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைப்புப் பணிகள் நடைபெறவுள்ளன. மேற்கூறிய திட்டங்கள் தவிர உள்ளூர் நீராதாரங்களான தனி மின்விசைத் திட்டங்கள் மூலம் 29 எம்.எல்.டி. குடிநீர் வழங்கப்படுகிறது.

ஆக டிசம்பர் 2026ல் இந்த திட்டங்கள் அனைத்தும் நிறைவுறும் போது திருவாரூர் மாவட்டத்தில் உள்ள மொத்தம் 13 இலட்சம் மக்களுக்கு தேவையான 93 எம்எல்டி குடிநீர் தாராளமாக வழங்க இயலும். ரூ.229 கோடி மதிப்பீட்டில் மன்னார்குடி நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் நடைபெற்று வருகின்றது. திருவாரூர் நகராட்சி மூலம் ரூ.29 கோடி மதிப்பீட்டில் 1 பாதாள சாக்கடைத் திட்டம் நடைபெற்று வருகின்றது. இதுபோன்று மக்கள் நலன்பெறும் வகையில் பல்வேறு செயல்பாடுகள் திருவாரூர் மாவட்டத்தில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது என நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

மேலும் இந்த நிகழ்வுகளில் ஒன்றியக்குழு புலிவலம் ஏ.தேவா, ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், ஐ.வி.குமரேசன், நகர செயலாளர்கள் எஸ்.வி.பக்கிரிசாமி, பூண்டி கே.கலைவேந்தன், மன்னை த.சோழராஜன், கவிதா பாண்டியன், பாத்திமா பஷீரா, .செந்தில், கே.எஸ்.எஸ்.தியாகபாரி, மாநில இரா.சங்கர், ரஜினி சின்னா, ஜி.வரதராஜன் மற்றும் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் வணிகர் சங்க அமைப்புகள் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் மாவட்ட சுகாதார பேரவைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர்ஸ்ரீ காந்த், மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர். உடன் சுகாதாரத் துறை இணை இயக்குநர் பானுமதி, மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் நகர்மன்றத் தலைவர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், தரங்கம்பாடி பேரூராட்சியில் தலைவர் சுகுண சங்கரி, சுகாதாரத் துறை துணை இயக்குநர் அஜீத், பிரபுகுமார் மற்றும் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வாலாஜாபாத் தி.கிருஷ்ணராஜ்
### அக்டோபர் 4 (2014)



**வாலாஜாபாத் ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக 1988 முதல் 1992 வரை நான்கு ஆண்டுகள் அதன்பின்னர் 1992 முதல் 2008ம் ஆண்டுவரை ஒன்றியச் செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர்.**

**தொடர்ந்து 20 ஆண்டு காலம் வாலாஜாபாத் ஒன்றியக் கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**